சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி.244/2023

**PW 1 வினோத்ராஜ்** **14.11.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையில் விபத்தை பொறுத்து நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்தில் அடிபட்டு இறந்தவர் எனது தகப்பனார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் விபத்து தேதியில் TN 01 AN 3117 என்ற பேருந்தில் பயணம் செய்தார் என்பதை பொறுத்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த நபர் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்து நடந்த சமயத்தில் அவர் தூங்கி கொண்டிருந்தார் என்று கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் பயணம் செய்த பேருந்து படுக்கை வசதி கொண்ட இரவு நேர பேருந்து என்றால் சரிதான். அந்த பேருந்தில் பயணம் செய்யும் நபர்கள் வெளியே பார்க்க முடியாது என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த இடமானது திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நடுப்பட்டி அருகே வயம்பட்டி பிளை ஓவர்ரில் நடந்தது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட இடமானது ஒரு வளைவு பகுதி என்று மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தானது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரியல்ல, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கரதையாகவும் விபத்து நடந்த இடத்தில் ஓட்ட வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து எப்போது நடந்தது என கேட்டால் நவம்பர் 29 அன்று நடந்தது. விபத்து நடந்த நேரம் அதிகாலை சுமார்

3 1/2 மணியிருக்கும். இந்த நவம்பர் மாதத்தில் அதிகாலையில் பனி இருக்கும் என்றும், அதனால் முன்புறம் உள்ள வாகனங்கள் சரிவர தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் பேருந்தின் இடது பக்கம் ஒரு லாரி சென்று கொண்டிருந்தது என்றும், அது திடிரென்று வலது பக்கம் வந்தது என்றும், அப்போது லாரியின் மீது மோதாமல் இருக்க வளைவான பகுதியில் திருப்பும் போது சென்டர் மீடியனில் மோதிவிட்டது என்று சொன்னால் அது சரியல்ல. நான் பேருந்து டிரைவரிடம் பேசினேன், தூக்க கலக்கத்தில் வண்டி ஓட்டி விபத்து ஏற்பட்டதாக அவர் என்னிடம் கூறினார், அதனை பொறுத்து எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து தேதியன்று எனது தகப்பனாருக்கு 66 வயதானது என்றும், நான் 60 வயது என தவறான குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது சரியல்ல. எனது தகப்பனாரின் பிறந்த தேதி என்றால் 11.12.வருடம் நினைவில்லை. எனது தகப்பனாரின் ஆதார் அட்டையில் கண்ட விவரங்களை பொறுத்து எனது தகப்பனார் தான் தெரிவித்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது தகப்பனார் பிறந்த 11.12.1957 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அதிக நஷ்ட ஈடு பெற வேண்டி எனது தகப்பனாரின் வயதை குறைத்து காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தின் போது எனது தகப்பனார் ஆர் எஸ் நகை தொழில்நுட்ப கம்பெனியில் நகை மதிப்பீட்டாளராக வேலை பார்த்து வந்தார் என்று சொல்லும் வகையில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மாதம் 18 ஆயிரம் எனது தகப்பனார் சம்பளமாக வாங்கி வந்ததை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது சகோதரிகள் 3, 4 மனுதாரர்கள் திருமணம் ஆகி தனியாக வசித்து வருகிறார்கள் என்றால்

சரிதான். அதனால் அவர்கள் எனது தகப்பனரின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மற்றும் வட்டி விகிதம் அதிகம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் கவனமாக வாகனத்தை ஓட்டினார் என்றும், அதனால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி